[1994 மார்ச் 18]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மார்ச் 1994 தேர்வுக்கு அரச்சலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, அவல்பூந்துறை அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் வெள்ளோடு அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் இணைத்து பள்ளியூத்து நவரசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியுடன்இணைத்து புதிதாக இவ்வாண்டு தேர்வு எழுத மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் மொடக்குறிச்சி தொகுதியில் அமைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

"எக்கட்சியையும் சாராத உறுப்பினர்கள்" என அறிவிக்கப்பட்ட முன்னால் அமைச்சர்கட்கு இருக்கைகள் ஒதுக்கீடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்கியிருக்கிறது. விவாதங்கள் நிறைவுபெற்று, நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, இந்த அவை இன்னும் 2மாத காலம் நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இங்கே விவாதங்கள் நடைபெற வேண்டும். அமைதியாக நடைபெற வேண்டும். விவாதங்கள் நல்லமுறையிலே நடப்பதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பை பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். இங்கே அவையிலே மூத்த உறுப்பினர்கள், 30 ஆண்டுகளுக்கு முன்னே தேர்ந்தெடுக்கப்பட்ட அவை முன்னவர் நாவலர் அவர்கள் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

அதே போல எங்களுடைய கட்சியின் சார்பிலே அவருக்கு முன்பாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட அக்காள் பொன்னம்மாள் இருக்கிறார்கள். 6 முறை ஒரே தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டி அம்பலம் போன்றவர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருடைய அனுபவமும் முழுமையாக இந்த அவைக்குப் பயன்பெற வேண்டும். உங்களுக்கு அவையை நடத்துவதிலே, எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும்

சுமுகமான சூழ்நிலையை உருவாககுவதற்கு, யாருடைய ஒத்துழைப்பு தேவை என்றாலும் எங்களை அழையுங்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழையுங்கள். அழைத்துப் பேசி, சுமுகமான ஒரு சூழ்நிலையை இந்த அவையை நடத்துவதற்கு ஏற்படுத்த வேண்டுமென்று நான் உங்களிடத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவையை நடத்துவதற்கு விதிகள் இருக்கின்றன. தெளிவாக வரையறுக்கப்பட்ட மரபுகள் இருக்கின்றன. அவையினுடைய மூத்த உறுப்பினர்கள் நிச்சயமாக உங்களுக்கு ஒத்துழைப்பு தருவார்கள். முன்னாள் சபாநாயகர் இராஜாராம் அவர்கள் எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினராக அறிவிக்கப் பட்டிருக்கிறார். எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினராக அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலேயும் அவர் முன் வரிசை யிலேதான் சென்ற கூட்டத் தொடரிலே அமர்ந்திருந்தார். இன்றையதினம் அவர் 3-வது வரிசைக்கோ, 4-வது வரிசைக்கோ அனுப்பப்பட்டிருக்கிறார். அவையிலே எந்த இருக்கையிலே, எந்த உறுப்பினர் அமர வேண்டும் என்பதற்கு அதை வகுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. நான் அதிலே தலையிடவில்லை என்றாலும்கூட தெளிவாக வரை யறுக்கப்பட்ட மரபுகள் இருக்கின்றன. மூத்த உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சபாநாயகர்கள் யாராக இருந்தாலும் அவமார்களுக்கு முன் வரிசையிலேதான் இடம் அளிக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் சொல்லி விடுகிறேன். இருக்கைகள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கிக் கொடுப்பது என்பது பேரவைத் தலைவராலே செய்யப்படுகிற ஒன்று. எந்த எந்த உறுப்பினருக்கு, எந்த எந்த இடத்தைப் பேரவைத் தலைவர் ஒதுக்குகிறாரோ அந்த இடத்தில் அவர்கள் அமர வேண்டும் என்று மிகத் தெளிவாக பேரவை விதி 6-ல் இருக்கிறது. இந்தப் பேரவை யிலேயே பல்வேறு காலக் கட்டங்களில் இங்கு இடம் ஒதுக்கீடு என்கிற அந்த ஒரு பிரச்சினையிலே மட்டும், எந்த உறுப்பினரும் எனக்கு இந்த இடம்தான் வேண்டும்; அந்த இடம் தான் வேண்டும் என்று கோரக்கூடிய வாய்ப்பை எந்த பேரவைத் தலைவரும் இங்கே வழங்க வில்லை. இதேப் பேரவையில் பல்வேறு பேரவைத் தலைவர் கள் இப்படிப்பட்டப் பிரச்சினைகள் எழுந்த காலத்திலே எல்லாம் பேரவை விதி 6-ஐ சுட்டிக்காட்டி, அந்தப் பிரச்சினையில் யாரும் தலையிடக் கூடாது, வேறு விவாதங் கள் இருக்கக் கூடாது என்று இங்கே கருத்துத் தெரிவித் திருக்கிறார்கள். அதற்கு நமக்கு பழைய நடவடிக்கைக் குறிப்புகளிலே பல்வேறு குறிப்புகள் இருக்கின்றன.